X 2015

**SET-4**

**Series RLH**

**Code No. 10**

Roll No. | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains **24** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **17** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# SUMMATIVE ASSESSMENT – II

# தமிழ்

# TAMIL

*கால அளவு : 3 மணி* | *மொ. மதிப்பெண்கள் : 90*

*Time allowed : 3 hours* | *Maximum Marks : 90*

**இக் கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது :**

**This question paper is divided into four Sections :**

| | | | |
|---|---|---|---|
| **பிரிவு அ** | : | படித்தல் (உரைநடைப்பகுதி) | *15 மதிப்பெண்கள்* |
| **SECTION A** | : | Reading Comprehension | *15 Marks* |
| **பிரிவு ஆ** | : | எழுதுதல் | *20 மதிப்பெண்கள்* |
| **SECTION B** | : | Writing | *20 Marks* |
| **பிரிவு இ** | : | இலக்கணம் | *15 மதிப்பெண்கள்* |
| **SECTION C** | : | Grammar | *15 Marks* |
| **பிரிவு ஈ** | : | இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள் | *40 மதிப்பெண்கள்* |
| **SECTION D** | : | Literature / Text Books | *40 Marks* |

## குறிப்பு

தெளிவான கையெழுத்து, ஏற்ற விடைகளை எழுத்துப் பிழைகள் இல்லாமல் எழுதுதல், மேற்கோள்கள், சிறந்த தமிழ்நடையுடன் எழுதப்படும் விடைத்தாள்கள் சிறந்த மதிப்பெண்கள் பெற வழிசெய்யும்.

## பகுதி அ

1. பின்வரும் பகுதியைப் படித்து, தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுதுக : 5

இந்தியன் இரயில்வே உலகின் நான்காவது மிகப்பெரிய நிர்வாக அமைப்பாகும். ஆண்டுதோறும் சுமார் 7 பில்லியன் மக்கள் பயணம் மேற்கொள்கின்றனர். 350 மில்லியன் டன் சரக்குகள் கையாளப்படுகின்றன. இந்தியாவில் 1853 ஆம் ஆண்டு இரயில் சேவை தொடங்கப்பட்டாலும் 1951 ஆம் ஆண்டு "இந்தியன் ரயில்வே" என்ற அமைப்பாகி நாட்டுடைமை ஆக்கப்பட்டன. ஏறத்தாழ பத்துலட்சம் நேரடிப் பணியாளர் களையும் ஆறுலட்சம் மறைமுகப் பணியாளர்களுக்கும் வேலை வாய்ப்பளிப்பது இந்தியன் இரயில்வே துறையாகும். இந்தியாவின் தென்கோடியில் உள்ளது கன்னியாகுமரி இரயில் நிலையம் வடகோடியில் உள்ளது பாராமுல்லா இரயில் நிலையம். கிழக்கு கோடியில் உள்ளது அஸ்ஸாமில் உள்ள லேகாபானி நிலையம். மேற்குக் கோடியில் உள்ளது குஜரத் கட்சில் உள்ள நாலியா இரயில் நிலையம் ஆகும்.

**வினாக்கள் :**

(i) இந்தியன் ரயில்வே நாட்டுடைமை ஆக்கப் பட்டது எப்போது ?

(அ) 1947 ஆம் ஆண்டு

(ஆ) 1853 ஆம் ஆண்டு

(இ) 1951 ஆம் ஆண்டு

(ஈ) 1877 ஆம் ஆண்டு

(ii) இந்தியாவின் வட கோடியில் உள்ள ரயில் நிலையம் எது ?

(அ) லேகாபனி ரயில் நிலையம்

(ஆ) கன்னியாகுமரி ரயில் நிலையம்

(இ) பாராமுல்லா இரயில்நிலையம்

(ஈ) மும்பை இரயில் நிலையம்

(iii) இந்தியன் இரயில்வேத் துறையில் பணியாற்றும் நேர் முகப்பணியாளர்கள் எத்தனை பேர் ?

(அ) ஆறு லட்சம்

(ஆ) பத்து லட்சம்

(இ) நான்கு லட்சம்

(ஈ) ஒன்பது லட்சம்

(iv) குஜராத் கட்சில் உள்ள இரயில் நிலையத்தின் பெயர் யாது ?

(அ) நாலியா

(ஆ) லேகாபானி

(இ) கன்னியாகுமரி

(ஈ) சென்னை எழும்பூர்

(v) உலகில் இந்தியன் இரயில்வேத் துறை வகிக்கும் இடம் எது ?

(அ) முதலாவது

(ஆ) நான்காவது

(இ) இரண்டாவது

(ஈ) மூன்றாவது

2. பின்வரும் பகுதியைப் படித்து அதன்கீழ் கொடுக்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு விடை எழுதுக : 5

தென் அமெரிக்காவில் பெருவைச் சார்ந்த பாலை வனம் உள்ளது. இப் பாலைவனம் சஹாராப் பாலைவனத் தினைப் போலப் பரந்திருந்தாலும் இங்கு மணலைப் பாக்க முடியாது. செம்மண் தரையாகவும் பழுப்புநிற நிலமாகவும் காட்சியளிக்கிறது இப்பாலை வனம். ஹெலிகாப்டரில் இருந்து பார்த்தால் ஸ்கேல்வைத்துப் பல கிலோமீட்டர் குறுக்கும் நெடுக்குமாக இழுக்கப்பட்டுக் காணப்படும் கோடுகளைப் பார்க்கும் போது வியப்பாகவும் மலைப்பாகவும் இருக்கும். காற்றிலும் மழையிலும் இந்த உருவக் கோடுகள் அழியாமல் இருப்பது மிகப்பெரிய விந்தை. ஆராய்ச்சியாளர்களின் கணக்குப்படி இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் பெருவில் வாழ்ந்த நாஸ்கா எனும் வம்சத்தினர் இக்கோடுகளை வரைந்திருப்பர் என்பது முடிவாகும். நாஸ்கா மக்கள் இவ்வடிவக் கோடுகளை ஏன் வரைந்தனர் ? இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனபோதும் இக்கோடுகள் அழியாமல் புத்தம் புதிதாகக் காட்சியளிப்பது எப்படி ? என்பது புரியாதபுதிராக உள்ளது.

மறுக்கமுடியாத உண்மையாக அறிவியல் அறிஞர்களுக்குச் சவால் விட்டுக் கொண்டிருக்கின்றன இக்கோடுகள்.

(i) கோடுகள் எத்தனை ஆண்டுகளுக்கு முன் வரையப் பட்டிருக்கலாம் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர் ?

(அ) பத்தாயிரம் ஆண்டுகள்

(ஆ) நான்காயிரம் ஆண்டுகள்

(இ) ஆயிரம் ஆண்டுகள்

(ஈ) இரண்டாயிரம் ஆண்டுகள்

(ii) பெரு எந்த நாட்டில் உள்ளது ?

(அ) ஆப்பிரிக்காவில்

(ஆ) ஆசியாவில்

(இ) வட அமெரிக்காவில்

(ஈ) தென் அமெரிக்காவில்

(iii) நாஸ்கா இனத்தவர் எந்நாட்டைச் சார்ந்தவர்களாவர் ?

(அ) இந்தியநாடு

(ஆ) ஆப்பிரிக்கநாடு

(இ) ஆப்கானிஸ்தான்

(ஈ) பெருநாடு

(iv) பாலைவனம் எவ்வாறு காட்சியளிக்கிறது ?

(அ) மணற்பகுதியாக

(ஆ) புல்வெளியாக

(இ) செம்மண் தரையாகவும் பழுப்பு நிறமாகவும்

(ஈ) ஏரிபோல

(v) நம்பமுடியாத விந்தை எது ?

(அ) பல கிலோமீட்டர் அளவுக்கு வரையப்பட்ட கோடுகள்

(ஆ) இரண்டாயிரம் ஆண்டுகளாகியும் புத்தம் புதிதாகக் காட்சியளிப்பவை

(இ) அறிவியல் அறிஞரின் ஆராய்ச்சி

(ஈ) இக்கோடுகள் எவர்களுக்குச் சவால் விடுகின்றன ? என்ற உண்மை.

3. பின்வரும் பகுதியைப் படித்து கீழே கொடுக்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு ஏற்ற விடையை எழுதுக : 5

நீர்யானை பகல் முழுவதும் நீரிலும் இரவில் தரையிலும் வாழும். ஆப்பிரிக்காவின் வெப்ப மண்டலப் பகுதியில் உள்ள நதிகளிலும் ஏரிகளிலும் இவை வாழும். சராசரியாக நீர்யானையின் எடை மூன்று டன். நீர்யானைகள் கூட்டங் கூட்டமாக வாழும் இயல்பின. சிங்கம், சிறுத்தை, கழுதைப்புலி ஆகியவை நீர்யானைக் குட்டிகளுக்கு எதிரிகளாகும். எதிரிகளின் ஆபத்திலிருந்து

தம் வாழ்வைக் காத்துக் கொள்ளும் நீர்யானைகள் ஐம்பது ஆண்டுகள் வரை உயிர்வாழும். நீர்யானைகளின் இறைச்சி ஆப்பிரிக்கப் பழங்குடி இனத்தவர்க்கு மிகவும் விருப்பமான உணவாகும். நீர்யானைகளில் குள்ள நீர்யானைகள் என்ற ஒரு வகை உண்டு. அவை பிக்மி என்றழைக்கப்படுகின்றன. நீர்யானையின் தந்தங்கள் யானையின் தந்தத்தைப்போல உறுதியானவையல்ல. விலையும் அதிகம் இல்லை. ஹிப்போபொட்டோமஸ் என்ற கிரேக்கச் சொல்லுக்கு நதிக்குதிரை என்பது பொருளாகும். பெரிய உருவில் திகழும் நீர்யானகள் உண்ணும் உணவின் அளவு மிகவும் குறைவு என்பது விந்தையான செய்தியாகும்.

(i) ஹிப்போபொட்டோமஸ் என்பதன் பொருள் யாது ?

(அ) வரிக்குதிரை

(ஆ) கழுதைப்புலி

(இ) நதிக்குதிரை

(ஈ) நீர்யானை

(ii) நீர்யானைகள் வாழ்நாள் எத்தனை ஆண்டுகளாம் ?

(அ) இருபது

(ஆ) நாற்பது

(இ) முப்பது

(ஈ) ஐம்பது

(iii) நீர்யானைகள் எவ்வாறு வாழும் இயல்பின ?

(அ) கூட்டம் கூட்டமாக

(ஆ) தனித்தனியே

(இ) மற்ற மிருகங்களுடன் இணைந்து

(ஈ) ஆண்பெண் இணையாக

(iv) நீர்யானைகள் எந்தநாட்டுப்பகுதியில் வாழ்கின்றன ?

(அ) அமெரிக்காவில்

(ஆ) ஆஸ்த்ரேலியாவில்

(இ) ஆப்பிரிக்காவின் வெப்பமண்டலப் பகுதிகளில்

(ஈ) இந்தியாவில்

(v) நீர்யானையின் சராசரி எடை எவ்வளவு ?

(அ) ஒரு டன்

(ஆ) மூன்று டன்

(இ) பத்து டன்

(ஈ) ஐந்து டன்

## பகுதி ஆ

4. அறிவியல் கண்காட்சியொன்றைக் கண்டு நீ பெற்ற பயன் குறித்து கிராமப்பகுதியில் வாழும் உனது தோழன்/தோழிக்குக் கடிதம் எழுது. *8*

**அல்லது**

மூளைச் சாவுகளும், இறந்தவர் உடலுறுப்புகளைத் தானம் செய்வதும் ஒவ்வொறு மனிதன் மனதிலும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருப்பதைக் காட்டுகிறது என்பதைப் பாராட்டி இதயமாற்று சிகிச்சை மருத்துவர் ஒருவருக்குக் கடிதம்.

கடிதத்தில் உனது முகவரி அறிவழகன் / அறிவழகி / எண் 7 பெரியார் சாலை திருவரங்கம். திருச்சி 620006 என்றாகட்டும்.

5. பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒரு பகுதியில்** கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. *8*

(i) கல்வியின் இன்றியமையாமை – நன்னெறிகளை ஊட்டும் கல்வி – நாட்டுப்பற்றை வளர்க்கும் கல்வி – நாட்டுக்குழைத்த நல்லவர் வாழ்வுமுறை கற்பிக்கும்கல்வி – எல்லா மொழிகளையும் மதிக்கும் பரந்தமனக்கல்வி – ஒற்றுமைவாழ, வளரச்செய்யும் கல்வி.

(ii) காடுகளும் மலைகளும் – இயற்கைச் சூழலில் காட்டுவிலங்குகள் – காடுகள் அழிப்பும் காட்டுவிலங்குகள் மக்கள் வாழிடங்களுக்குப் படையெடுத்தலும் – பயிர்கள், தோட்டங்கள் அழிக்கப்படுதல் – மக்கள் அச்சம் – அழிவைத் தடுக்கக் காடுகளைக் காத்தல் – நிம்மதியான வாழ்வு.

(iii) உலகமக்களின் இன்றையத்தேவை — வன்முறை ஒழிப்பு — சகோதர மனப்பான்மை வளரத் தலைவர் கள் அறிவுரைகள் — ஆக்கப்பணியின் சிறப்பும் அழிவுப்பாதையின் இழிவும் — வன்முறையற்ற மனிதநேயம் வளர்தல்.

6. தொலைத்தொடர்புத்துறை நீ வாழும் பகுதியில் நடத்திய தொலைபேசிகளும், பேசும்முறைகளும், பயன்படுத்தும் போது காட்டப்பட வேண்டிய கவனமும் பற்றிய விழிப்புணர்வு முகாம். 4

**அல்லது**

பொது சுகாதார முறைகளும் நோய்களைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளையும் விளக்கும் சுகாதாரத்துறையின் காணொலிக்காட்சி முகாம்பற்றி விவரித்து அறிக்கை எழுதுக.

## பகுதி இ

7. சான்று தருக (**மூன்றுமட்டும்**) :

(i) புளிமா

(அ) கற்க

(ஆ) கசடற

(இ) கற்றபின்

(ஈ) அதற்கு

(ii) தேமாங்காய்

(அ) காவாக்கால்

(ஆ) கற்றனைத்

(இ) இளையோனும்

(ஈ) குன்றெடுத்து

(iii) திரிதல் விகாரம்

(அ) பல்வலி

(ஆ) பற்பொடி

(இ) தமிழ்ப்பணி

(ஈ) முள்வேலை

(iv) மருதம் நில விலங்கு

(அ) மான்

(ஆ) முதலை

(இ) எருமை

(ஈ) புலி

(v) பிறிதுமொழிதலணி

(அ) பகல்வெல்லுங் கூகைமைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது

(ஆ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சாலமிகுத்துப் பெமின்

(இ) தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்

(ஈ) நெடும்புனலுள் வெல்லும் முதலை அரும்புனலின்
நீங்கின் அதனைப் பிற

8. நிரப்புக (**மூன்று** மட்டும்) 3

(i) காடும் காடுசார்ந்த இடமும் __________ நிலம் எனப்படும்.

(அ) பாலை

(ஆ) மருதம்

(இ) முல்லை

(ஈ) குறிஞ்சி

(ii) வெண்பா __________ வகைப்படும்.

(அ) நான்கு

(ஆ) ஐந்து

(இ) ஏழு

(ஈ) ஆறு

(iii) ஆசிரியப்பா ________ ஓசை பெற்று வரும்.

(அ) செப்பலோசை

(ஆ) அகவல் ஓசை

(இ) துள்ளல் ஓசை

(ஈ) தூங்கல் ஓசை

(iv) காசு பிறப்பு நாள் மலர் எனும் ஈற்றுச்சீர் வாய்பாடுகளில் ஒன்றைப் பெற்று வருவது ________ .

(அ) கலிப்பா

(ஆ) ஆசிரியப்பா

(இ) வஞ்சிப்பா

(ஈ) வெண்பா

(v) ஒருசொல் இருபொருள்பட அமைந்து வரும் வெண்பாக்கள் ________ அல்லது ________ எனப்படும் ?

(அ) சிந்தியல் வெண்பா

(ஆ) பஃறொடை வெண்பா

(இ) ஆசிரியப்பா

(ஈ) சிலேடை அல்லது இரட்டுற மொழிதல்

**9.** கூறியவாறு செய்க (**மூன்று** மட்டும்) *3*

(i) நாடு மூவசைச் சீராக்குக.

(அ) நாடா

(ஆ) நாட்டினர்

(இ) நாடல்ல

(ஈ) நாட்டவர்

(ii) வாலறிவன் வாய்பாடு கூறுக.

(அ) தேமாங்காய்

(ஆ) தேமாங்கனி

(இ) கூவிளங்காய்

(ஈ) கருவிளங்காய

(iii) பின்செல் **பவர்** எனமுடியும் குறட்பாவின் ஈறு

(அ) காசு எனும் வாய்பாடு கொண்டுள்ளது

(ஆ) நாள் எனும் வாய்பாடு கொண்டது

(இ) மலர் என்னும் வாய்பாடுகொண்டது

(ஈ) பிறப்பு எனும் வாய்பாடு கொண்டது

(iv) மக்காள் அசை பிரித்திடுக

(அ) புளிமா

(ஆ) கூவிளம்

(இ) தேமா

(ஈ) கருவிளம்

(v) கண்ணிற் கணிகலன் கண்ணோட்டம் - தளை கூறுக.

(அ) இயற்சீர் வெண்டளை

(ஆ) வெண்சீர்வெண்டளை

(இ) நேரொன்றாசிரியத்தளை

(ஈ) நிரையொன்றாசிரியத்தளை

10. இலக்கணக்குறிப்பு தருக (**மூன்று** மட்டும்) *3*

(i) வாய்ச்சொற்கள்

(அ) புளிமா

(ஆ) தேமாங்காய்

(இ) புளிமாங்காய்

(ஈ) கருவிளங்காய்

(ii) பொற்கோயில்

(அ) இயல்புப் புணர்ச்சி

(ஆ) தோன்றல் விகாரம்

(இ) திரிதல் விகாரம்

(ஈ) கெடுதல் விகாரம்

(iii) மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்

ஆலகு நீர பிற.

(அ) ஒரு விகற்ப வெண்பா

(ஆ) இருவிகற்ப வெண்பா

(இ) இன்னிசைவெண்பா

(ஈ) சிந்தியல் வெண்பா

(iv) தீயவை தீய பயத்தலால் தீயவை

தீயினும் அஞ்சப் படும்

(அ) சிலேடை அணி

(ஆ) சொற்பொருற் பின்வருநிலையணி

(இ) பொருள்பின்வருநிலையணி

(ஈ) வஞ்சப்புகழ்ச்சியணி

(v) மூன்றடிகள் உடையதாய் இருவிகற்பமாம் இரண்டாமடியில் இறுதியில் தனிச்சொல் பெற்றுவருவது

(அ) நேரிசை வெண்பா

(ஆ) பஃறொடை வெண்பா

(இ) இன்னிசை வெண்பா

(ஈ) இன்னிசைச் சிந்தியல் வெண்பா

**11.** சரியான சொற்றொடரைத் தேர்ந்து எழுதுக. **(மூன்று** மட்டும்) *3*

(i) புறத்திணைகள் மொத்தம் எட்டு

புறத்திணைகள் மொத்தம் பன்னிரெண்டு

புறத்திணைகள் மொத்தம் பத்து

புறத்திணைகள் மொத்தம் ஆறு

(ii) அகப்பொருள் வாழ்வியல் பற்றிக்கூறுவது

அகப்பொருள் ஆட்சியியல் பற்றிக் கூறுவது

அகப்பொருள் நீதியியல் பற்றிக்கூறுவது

அகப்பொருள் போரியல் பற்றிக்கூறுவது

(iii) இளவேனிற்காலம் ஆவணி புரட்டாசி

இளவேனிற் காலம் ஐப்பசி கார்த்திகை

இனவேனிற்காலம் சித்திரை வைகாசி

இளவேனிற்காலம் மாசி பங்குனி

(iv) திணைகள் நான்கு வகைப்படும்

திணைகள் ஆறு வகைப்படும்

திணைகள் ஐந்து வகைப்படும்

திணைகள்மூ வகைப்படும்

(v) பண்புப்பெயர்கள் நான்கு வகைப்படும்

பண்புப்பெயர்கள் அறு வகைப்படும்

பண்புப்பெயர்கள் ஐந்து வகைப்படும்

பண்புப்பெயர்கள் மூவகைப்படும்

## பகுதி ஈ

**12.** உரைநடைப் பகுதியைப் படித்து, கீழே கொடுக்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு விடைதருக : *5*

வள்ளலார் இறைவன் ஒருவனே. அவன் ஒளி வடிவினன். அருட்பெருஞ் ஜோதியாக விளங்கும் இறைவனை அடைவதற்குத் தனிப் பெருங்கருணையே கருவி என்பதனை விளக்கினார். புலால் புசித்தல் கூடாது. ஏழைமக்கனின் பசியைப்போக்கல் வேண்டும். அனைவரை உடன்பிறப்பாய் நேசித்தல் வேண்டும் என்ற வள்ளலார் மொழிப்பற்று மிககவர். தமிழ்மொழியே இறவாத நிலைதரும். சாகாக்கல்வியை மிகவும் எளிமையாய் அறிவிப்பது தென்மொழியே என்றார் வள்ளலார்.

(i) இறைவன் எவ்வடிவினன் ?

(அ) நீர்

(ஆ) நிலம்

(இ) காற்று

(ஈ) ஒளி

(ii) இறைவனை அடைய ஏற்றவழி யாது ?

(அ) கருணைவழி

(ஆ) மறைவழி

(இ) துறவற வழி

(ஈ) தவநெறி

(iii) மனிதன் எதைப்புசித்தல் கூடாது ?

(அ) பழங்கள்

(ஆ) கீரைகள்

(இ) புலால்

(ஈ) காய்கனிகள்

(iv) எவர் பசியுடையவராவர் ?

(அ) ஏழைமக்கள்

(ஆ) நோயாளர்கள்

(இ) செல்வர்

(ஈ) யோகிகள்

(v) இறவாத நிலைதருவது எது ?

(அ) தமிழ்மொழி

(ஆ) மறைமொழி

(இ) அருள்மொழி

(ஈ) அன்னிய மொழி

**13.** பின் வரும் உரைநடைப் பகுதியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு உரிய விடைகளைத் தேர்ந்து எழுதுக. *5*

பழந்தமிழர் வாழ்வு அறத்தின் அடிப்படையில் தொடங்கியது. அறத்தின் வழியே பொருளையும் இன்பத்தையும் எட்டியது அறத்தைக் கைக்கொண்டதால் வீடு என்ற ஒன்று வேண்டாத தாயிற்று. பழந்தமிழர் அன்பு வழியினர். அறத்துக்கே அன்பு சார்பு என்பதை நன்கு உணர்ந்திருந்தனர். வீரத்தைப்போற்றினர். களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே எனும் புறப்பாடல் முதற்கடமையாக்குகிறது. வீரமற்ற ஆடவரைப் பெண்டிர் மணந்து கொள்ள விழையார். பால்மணம் மாறாச் சிறுமகன் தன்னை, தந்தையையும் கணவனையும் போரில் இழந்போதும் செருக்களம் நோக்கிப் பகைத்திறம் மாய்க்க விடுத்ததை ஒக்கூர் மாசாத்தியார் எனும் பெண்பாற்புலவர் பாடல்மூலம் விளக்குகிறார்.

(i) பழம்தமிழர் வாழ்வுக்கு எது வேண்டாததாயிற்று ?

(அ) வீரம்

(ஆ) வீடு

(இ) அன்பு

(ஈ) அறம்

(ii) களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே என்னும் வரிகள் ?

(அ) அகநானூற்றில்

(ஆ) புறப்பாடலில் இடம் பெற்றது

(இ) குறுந்தொகை வரிகள்

(ஈ) தொல்காப்பிய வரிகள்

(iii) தமிழர் எதைப் போற்றினர் ?

(அ) வீரம்

(ஆ) போர்

(இ) உழவுத்தொழில்

(ஈ) கொடை

(iv) பழந்தமிழர் எவ்வழியினர் ?

(அ) மறவழியினர்

(ஆ) அன்புவழியினர்

(இ) செல்வர்

(ஈ) எளியர்

(v) பெண்புலவர் யார் இப்பகுதியில் கூறப்பட்டுள்ளார் ?

(அ) ஔவையார்

(ஆ) காக்கைப்பாடினியார்

(இ) ஒக்கூர் மாசாத்தியார்

(ஈ) கபிலர்

14. பின்வரும் செய்யுட் பகுதியைப்படித்து, கொடுக்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு விடைதருக : *4*

அதிர்ந்திடுந்தொனி செவிவுற அடவியில் அடைந்த
முதிர்ந்த மேதியும் கவையடிக் கேழலும் முழுதும்
பொதிந்த மெய்மயி ரெண்கிணங் களுமரைப் போத்தும்
பதிந்த கால்தரு மாறிட வீழ்ந்துடல் பதைக்கும்.

(i) இப்பாடலை உடைய நூலை இயற்றியவர் யார் ?

(அ) உமறுப்புலவர்

(ஆ) குலசேகராழ்வார்

(இ) இளந்திரையன்

(ஈ) கம்பர்

(ii) அடவி என்பதன் பொருள் யாது ?

(அ) ஆறு

(ஆ) குகை

(இ) காடு

(ஈ) உடல்

(iii) மரை என்பதன் பொருள் யாது ?

(அ) புலி

(ஆ) கரடி

(இ) எருமை

(ஈ) மான்

(iv) அதிர்ந்திடுந்தொனி எழுப்பியது எது ?

(அ) யானை

(ஆ) காட்டுப்பன்றி

(இ) புலி

(ஈ) சிங்கம்

**15.** எவையேனும் **இரண்டு** உரைநடை வினாக்களுக்கு விடைதருக : 10

(i) சிறுதொழில்பயிற்சி, சிறுதொழில் கல்விபற்றிப் பல்துறை வேலைவாய்ப்புக்கள் பாடப்பகுதி கூறுவதை விவரிக்க.

(ii) வள்ளலாரின் சொற்பொழிவாற்றும் திறனையும் திகம்பர சாமியார் அவரைப் போற்றிய நிகழ்வையும் விவரிக்க.

(iii) பண்டைத்தமிழரின் பொறியியல் கனிமவியல் அறிவு பற்றி விவரிக்க.

(iv) பண்டைத்தமிழர் வாழ்வு எவற்றின் அமைந்திருந்தது என்பதை விளக்கி எழுதுக.

(v) விளையும் பயிர் முளையிலேயேதெரியும் என்பதைக் காந்தியின் வாழ்விலிருந்து அறிந்ததை விவரிக்க.

**16.** எவையேனும் **இரண்டு** செய்யுட்பகுதி வினாக்களுக்கு விடைதருக : 8

(i) புலிவசனித்த படலத்தில் உமறுப்புலவர் கூறும் கருத்துக்களை விவரிக்க.

(ii) பெரியாரது இலக்கணத்தையும், அவரைத் துணைக்கோடலின் சிறப்பையும் விவரிக்க.

(iii) நிற்க நேரமில்லாததை இளந்திரையன் பாடல் எவ்வாறு விளக்குகிறது ?

(iv) கலித்தொகை விளக்கும் வாழ்க்கை நெறிமுறைகளை விவரிக்க.

17. ஏதேனும் **ஒரு** துணைப்பாட வினாவிற்கு விளக்கமான விடைதருக : 8

(i) நூலகத்துறையின் வளர்ச்சி, நூல்களின் தோற்றம் நூலகங்கள் அன்றும் இன்றும் உள்ள நிலைகளை விவரிக்க.

(ii) அயோத்தி தாசரின் பிறப்பும், சமூகப் பணிகளையும் விவரிக்க.

(iii) மாற்றுத்திறனாளிகளின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் இலிண்ட்கிரென் என்பதை விவரிக்க.